**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure )**
**--**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | SC. No.57/2023 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.8 |
| பெயர் | முபாரக் அலி | கிராமம் | |
| தந்தை பெயர் | சௌகத் அலி | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.P.Manikandanprabu, Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 17.06.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1- Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.
Aadhar card of the Witness verified.

எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது திருச்சி கன்டோன்மெண்ட் காவேரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 09.01.2022 தேதியில் மதியம் 03.20 மணியளவில் நான் பணியில் இருந்தபோது தேவேந்திரன், த/பெ.சிங்காரஉடையார். வயது 57 வயதுடைய நபர் புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டு அவருடைய மகன் சிவா என்பவரால் காவேரி மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். அவரை பரிசோதித்தபோது முழு சுய நினைவுடன் இருந்தார். மேலும், தன்னுடைய சகோதரன் பழனிச்சாமி என்பவரால் கூர்மையான கத்தியைக்கொண்டு தாக்கியதாக கூறினார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் இருந்தது. 1) இரண்டு எண்ணிக்கையிலான ஆழமான குத்துக்காயங்கள் வயிற்றின் இடப்பக்கத்தில் ஏற்பட்டு குடல் வெளியே வந்த நிலையில் இருந்தது. 2) வயிற்றில் சிடி ஸ்கேன் செய்து பார்த்தபோது, குடலில் கிழிந்த காயங்கள் இருந்தது. அவரை அறுவை சிகிச்சை வார்டில் அனுமதித்து சிகிச்சை செய்தோம். மேலும், அவரை 18.01.2022

அன்று மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.அவருக்கு ஏற்பட்டிருந்த காயம் கொடுங்காயம் என்று சான்றிதழ் வழங்கினேன். அந்த காயச்சான்றானது அ.சா.ஆ.4. நான் வழங்கிய காயச்சான்றிதழில் மேற்படி நபருக்கு இடதுப்பக்கம் மட்டும் தான் குத்துக்காயம் ஏற்பட்டிருந்ததாக காயச்சான்றிதழில் குறிப்பபிடவில்லை.

**குறுக்கு விசாரணை**

காயம்பட்ட நபரை நான் விசாரிக்கும்போது அவருடைய சகோதரர் பழனிச்சாமி கத்தியால் குத்தியதாக என்னிடம் வாய்மொழியாக கூறினார். அந்த சங்கதி குறித்து நான் காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னேன். காயம்பட்ட நபர் புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் எதையும் என்னிடம் காட்டப்படவில்லை. புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் அவர் ஏற்கனவே சிகிச்சை பெற்றதாக நான் விசாரிக்கும்போது என்னிடம் கூறினார். எதனடிப்படையில் அவர் புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார் என்று நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. காயம்பட்ட நபர் உள்நோக்கத்துடன் தன்னை தாக்கியதாக சொல்லும் நபரின் பெயரை என்னிடம் கூறினார் என்று சொன்னால் சரியல்ல. காயம்பட்ட நபருக்கு நான் சிகிச்சையளித்த விபரத்தை புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு நான் அனுப்பவில்லை. நான் சொல்வதுபோல் மேற்படி நபருக்கு காயங்கள் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/–முபாரக் அலி

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

**Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**புதுக்கோட்டை.**